பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

06 10 2026 TUESDAY   12 40 PM

ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாடுமுழுவதும் ஐந்து சட்டப்பேரவை தொகுதிகள் மற்றும் ஒரு மக்களவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு தற்போது நடைபெற்று வருகிறது.

2. பாதுகாப்புத்துறையில் உலக அரங்கில் இந்தியாவை முன்னணி நாடாக உருவாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறிள்ளார்.

3. தொலைமருத்துவ சேவையான இ-சஞ்சீவனி மூலம், இதுவரை 50 கோடிக்கும் அதிகமானோர் பயனடைந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. நைஜீரியாவில் நேரிட்ட விமான விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 32-ஆக அதிகரித்துள்ளது.

5. சீன Smash டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Manush Sha - Diya Chitale இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

நாட்டின் பல்வேறு மாநிலங்களில் காலியாக உள்ள ஒரு மக்களவைத் தொகுதி மற்றும் 5 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் வாக்குப்பதிவு தற்போது நடைபெற்று வருகிறது.

அஸ்ஸாமின் Nagaon மக்களவைத் தொகுதியில் காலை 11 மணி நிலவரப்படி, 37 புள்ளி எட்டு இரண்டு சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. இத்தொகுதியில் 258 வாக்குச்சாவடிகள் முற்றிலும் பெண் அதிகாரிகளால் நிர்வகிக்கப்படுகிறது.

மேற்குவங்க மாநிலம், Nandigram சட்டப்பேரவை தொகுதியில் காலை 11 மணி நிலவரப்படி, 43 புள்ளி ஒன்பது ஐந்து சதவீத வாக்குகளும், Rejinagar தொகுதியில் 38 புள்ளி ஏழு ஒன்று சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

தமிழகத்தின் மதுராந்தகம் சட்டப்பேரவை தொகுதியில் காலை 11 மணி நிலவரப்படி 33 புள்ளி ஐந்து ஐந்து சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் . சுரேகா 57 செகண்ட்ஸ்)

தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் வாக்காளர்கள் ஆர்வத்துடன் வாக்களித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் சபரிஷ் 47 செகண்ட்ஸ்)

புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு உட்பட்ட தட்டாஞ்சாவடி சட்டப்பேரவை தொகுதியிலும் இடைத்தேர்தல் வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது.

>>>>><<<<<

பாதுகாப்புத்துறையில் உலக அரங்கில் இந்தியாவை முன்னணி நாடாக உருவாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

விசாகப்பட்டினத்தில் உள்ள ஹிந்துஸ்தான் கப்பல் கட்டும் தளத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கடற்படைக்கான புதிய கப்பலை நாட்டுக்கு அர்ப்பணித்த அவர், நவீன கிரேன் உள்ளிட்ட வசதிகளையும் தொடங்கி வைத்து பேசினார்.

இந்த புதிய கப்பல், போர்க்கப்பல்களுக்கு தேவையான எரிபொருள், தண்ணீர் உள்ளிட்டவற்றை வழங்குவதன் மூலம், கடற்படை கப்பல்கள் நடுக்கடலில் நீண்ட நாட்கள் தொய்வின்றி பணியாற்ற உதவிகரமாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு தளவாட உற்பத்தியில் சுயசார்பை எட்டுவதுடன், உலக அளவில் போட்டியிடும் வகையில் முன்னேற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்தியாவில் உள்ள கப்பல் கட்டும் தளங்கள், இந்திய கடற்படைக்கு மட்டுமின்றி, நட்பு நாடுகளுக்கும் பயனளிக்கும் வகையில் இருக்க வேண்டும் என்றும் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

>>>>><<<<<

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், ஆப்பிரிக்க நாடுகளில் ஐந்து நாள் பயணமாக இன்று புறப்பட்டுச் சென்றார்.

தமது பயணத்தின் முதற்கட்டமாக Ghana செல்லும் அவர், அந்நாட்டு தலைவர்களுடன் இருதரப்பு வர்த்தகம், திறன் மேம்பாடு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

பின்னர் Cote d'Ivoire செல்லும் அவர், அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் உள்ளிட்டோருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

பயணத்தின் இறுதியாக எத்தியோப்பியா செல்லும் டாக்டர் ஜெய்சங்கர், அந்நாட்டு வெளியுறவு அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்துவதுடன், தூதரக அதிகாரிகள் மாநாட்டிலும் பங்கேற்கிறார்.

>>>>><<<<<

மேற்காசிய நாடுகளில் நிலவும் போர் பதற்றம் மற்றும் விமான எரிபொருள் விலை உயர்வு காரணமாகவே, விமான போக்குவரத்து கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுதொடர்பாக மத்திய அரசு விமான நிறுவனங்கள் மற்றும் எண்ணெய் நிறுவனங்களுடன் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருவதாக கூறினார்.

அனைத்து தரப்பினரையும் கலந்து ஆலோசித்த பின்னர், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்தார்.

>>>>><<<<<

வளரும் நாடுகளுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில், சர்வதேச நிதி நிறுவனங்களில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா கூட்டத்தில் பேசிய இந்திய நாடாளுமன்ற தூதுக்குழுவின் உறுப்பினர் திரு. C.P. Joshi, இத்தகைய நிறுவனங்களில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதன் மூலமே, வளர்ச்சிப் பணிகளுக்கு நிதியுதவி கிடைப்பது உறுதி செய்யப்படும் என்று கூறினார்.

சர்வதேச சூரியசக்தி கூட்டணி உள்ளிட்ட அமைப்புகள் வாயிலாக, வளரும் நாடுகளுக்கு இந்தியா நிதியுதவி அளித்து வருவதையும் திரு. C.P. Joshi சுட்டிக்காட்டினர்.

குழுவின் மற்றொரு உறுப்பினரான திரு. Banshilal Gurjar பேசும்போது, ஐ.நா சபைக்கு செலுத்த வேண்டிய தொகையை உறுப்பு நாடுகள் உரிய நேரத்தில் செலுத்துமாறு வலியுறுத்தினார்.

இந்தியா, தான் செலுத்த வேண்டிய தொகையை உரிய நேரத்தில் செலுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

>>>>><<<<<

தொலைமருத்துவ சேவையான இ-சஞ்சீவனி மூலம், இதுவரை 50 கோடிக்கும் அதிகமானோர் பயனடைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக மத்திய சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் இதுவரை 50 லட்சத்திற்கும் மேற்பட்ட தொலைபேசி அழைப்புகள் வாயிலாக மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, மருத்துவமனைகளுக்கு நேரில் வரஇயலாத கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு சுகாதார சேவைகள் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

மக்களுக்கு தேவையான தொடக்க நிலை சுகாதார சேவைகளை வழங்குவதில், இ-சஞ்சீவனி திட்டம், உலகின் மிகப் பெரிய தொலை மருத்துவ சேவையாக உருவெடுத்துள்ளது என்றும் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தவர்களில் 57 சதவீதத்திற்கும் அதிகமானோர் பெண்கள் என்றும், மூத்த குடிமக்கள் 16 புள்ளி இரண்டு ஐந்து சதவீதம் பேர் என்றும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்த திட்டம் தற்போது செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் இணைக்கப்பட்டு, மேம்பட்ட சேவையை வழங்கி வருவதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

நைஜீரியாவில் நேரிட்ட விமான விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 32 ஆக அதிகரித்துள்ளது.

விமானப் படைக்கு சொந்தமான அந்த விமானத்தில் பயணம் செய்த விமானப் பணியாளர்கள் உள்ளிட்ட அனைவரும் உயிரிழந்துவிட்டதாக அந்நாட்டு அதிபர் திரு. Bola Tinubu உறுதிப்படுத்தியுள்ளார்.

விமானத்தின் பாகங்கள் அந்நாட்டின் தென்மேற்கு பகுதியில் உள்ள Igbokoda கடற்கரை பகுதியில் கண்டெடுக்கப்பட்டிருப்பதாக விமானப் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மீட்புப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், விபத்துக்கான காரணம் குறித்து முழுமையான விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

இங்கிலாந்து நாட்டின் பிரபல எழுத்தாளர் Jeffrey Archer லண்டனில் காலமானார். அவருக்கு வயது 86.

கன்சர்வேட்டிவ் கட்சி சார்பில் அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்துள்ள அவர், பிரபுக்கள் சபை உறுப்பினராகவும் பொறுப்பு வகித்துள்ளார்.

>>>>><<<<<

சீன Smash டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Manush Sha - Diya Chitale இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 11-7, 11-5, 11-4 என்ற செட்கணக்கில் எகிப்தின் Youssef Abdelaziz-Mariam Alhodaby இணையை வென்றது.

>>>>><<<<<

இந்தியா - உருகுவே அணிகளுக்கு இடையேயான நட்புணர்வு கால்பந்து போட்டி இன்று நடைபெறுகிறது.

கொல்கத்தாவில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>>><<<<<

இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையேயான முதலாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

லக்னோவில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

இரு அணிகளுக்கும் இடையே 5 ஆட்டங்களைக் கொண்ட இத்தொடரின் இரண்டாவது போட்டி, வரும் 9ஆம் தேதியும், மூன்றாவது போட்டி 11ஆம் தேதியும், நான்காவது போட்டி 14ஆம் தேதியும், ஐந்தாவது மற்றும் இறுதிப்போட்டி 17ஆம் தேதியும் நடைபெறவுள்ளன.

>>>>><<<<<

இந்தியா ஏ - ஆஸ்திரேலியா ஏ அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

புதுச்சேரியில் இப்போட்டி பிற்பகல் 2 மணிக்கு தொடங்குகிறது.

>>>>>END<<<<<